தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590


**<u>ஆணை நாள் 19.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA-10426/A/2019</u>**

| | | |
|---|---|---|
| திரு M. ராஜசேகரன் | -- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர் | |
| பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,(தலைமையிடம்) மாவட்ட காவல் அலுவலகம், நாமக்கல். | -- | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 07.08.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், 01.06.2019, 02.06.2019 ஆகிய தேதிகளில் பரமத்தி வேலூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார்கள் Protection of Civil Rights 1955 and Scheduled Caste and Scheduled Tribe (Prevention of Atrocities) Amendment Act 2018-ன்படி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் தொடர்பாக 5 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு 19(1)-ன்கீழ் 16.09.2019-ல் தமது முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 19.10.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 13.10..2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 22/10/2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 02.11.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.ஜி4/14-SIC/15238/2019 RTI No.554/2019 நாள் 22.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 19.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

வழக்கு எண். SA-10426/A/**2019**

பெறுநர்
பொது அதிகார அமைப்பு
பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், (தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

மனுதாரர்
திரு M. ராஜசேகரன்,
எண்.27/8, கிழக்கு தெரு,
பொத்தனூர் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம் - 638 181.
PR/PS 23/11/2020